Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 72 மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து... காப்பாற்றுகிறீர்; சங்.31:20. *மார்ச் 2026* **No.3**

தூய ஆவியானவரும் மிஷன்களும்

The holy spirit and missions

Andrew Murray (1828-1917)

மிஷன்களின் ஆவியானவராக ஆவியானவர் பரத்திலிருந்து இறங்கி வந்து, உலகின் முடிவுபரியந்தம் சாட்சியாக இருக்க கிறிஸ்துவின் சீஷர்களை தூண்டி வலுப்படுத்துகிறார். அதன் ஆரம்பம், முன்னேற்றம், வெற்றி ஆகியவை அவருடையவைகள். விசுவாசிகளின் இருதயத்தில் ஆண்டவருடைய கனத்தை ஏற்படுத்தி விழிப்புணர்வடையச் செய்பவர் அவரே. அழிந்து போகும் ஆத்துமாக்கள்மேல் பரிதாபத்தையும், அவருடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசத்தையும், அவரது கட்டளைகளுக்கு விருப்பத்துடன் கீழ்ப்படிவதையும் அளித்து மிஷன்கள் வளர உதவி செய்கிறார். தகுதியுள்ள மக்களை அழைத்து ஒன்றாக இணைத்து வெளியே சென்று வாசல்களைத் திறந்து அவிசுவாசிகளின் இருதயங்கள் வசனத்தை ஏற்றுக் கொள்ள ஆசையை உண்டு பண்ணுகிறார். சாத்தானுடைய இருக்கைகள் இருக்குமிடத்திலும் சிலுவையை நிறுத்தி அதைச் சுற்றிலும் ஆண்டவருடைய மீட்பைப் பெற்றவர்களை நிறுத்துகிறார்.

மிஷன்கள் தூய ஆவியானவரின் விசேஷித்த பணியாகும். தேவபணிக்கான விருப்பமில்லாதவர்கள் ஆவியால் நிரப்பப்பட எதிர்பார்க்கமாட்டார்கள். தேவபணி நடைபெற அல்லது ஜெபிக்க விரும்புபவர்கள் தனது பெலவீனம், ஏழ்மை இவற்றைக் குறித்து பயப்பட மாட்டார்கள். ஏனெனில் தூய ஆவியானவர்தான் தமது வல்லமையால் அவர்களை தெய்வீக நியமனம் செய்கிறவர். எனவே தேவபணிக்காக ஜெபிக்கிறவர்கள் அல்லது அதிக ஊழிய ஆவி வேண்டும் என்பவர்கள் சபையிலிருந்தால் சபையிலும் அனைத்துப் பணியிலும், தொழுகையிலும் நமக்குள் வாசம்பண்ணும் ஆவியானவர் முழுவதுமாய் அசைவாடும்படி முதலாவது ஜெபிக்க வேண்டும்.

ஆவியானவரால் ஆரம்பிக்கப்பட்ட சபைகள் மற்றும் தேவபணிகள் ஆசீர்வதிக்கப்பட்டவை. அங்கு ஆவியானவர் வழிநடத்தி, ஆசீர்வாதம் அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ள அவர் அனுமதிக்கப்படுகிறார். பத்து நாள் ஜெபித்து, காத்திருந்ததால் ஆவியானவர் அக்கினியாய் இறங்கியது எருசலேம் சபை பிறப்பதற்குக் காரணமாயிருந்தது அப்.1-2. ஊழியம் செய்வதும் உபவாசிப்பதும் மறுபடியும் திரும்ப உபவாசிப்பதும், ஜெபிப்பது மாயிருந்தபோது ஆவியானவர் பர்னபா, பவுல் என்பவர்களை ஊழியத்திற்காக அனுப்ப அந்தியோகியா சபை ஒரு மிஷனெறி சபையாக அர்ப்பணமானது 13:1-4. காத்திருப்பதும், ஜெபிப்பதும், பின்பு பரலோக ஆண்டவரிடமிருந்து ஆவியின் வல்லமையைப் பெறுவதும் சபையின் பணிக்கு சந்தோஷமும் ஆசீர்வாதமுமாகும்.

தனது இல்லத்திலிருந்து தொலைவில் மிஷனெறி பணி செய்து கொண்டிருக்கும் ஒருவர் இதை வாசிக்கிறீர்களா? சந்தோஷமாயிருங்கள்! தேவனுடைய பலத்த வல்லமையாக இயேசுகிறிஸ்துவில் வாசம் பண்ணியவர் உங்களில் இருக்கிறார். பணி அவருடையது. அவரையே சார்ந்து அவருக்கே அர்ப்பணித்து காத்திருங்கள்

அனைத்து கிறிஸ்தவர்களும் இயக்குனர்களாக, ஆதரவாளர்களாக, நன்கொடையாளர்களாக, ஜெப உதவியாளர்களாக ஏதோ ஒருவிதத்தில் அவரது ராஜ்யம் வருவதை துரிதப்படுத்தும் மிகப்பெரிய பணியில் உதவி செய்வோம்! சந்தோஷமாயிருங்கள்! சிங்காசனத்திற்கு முன்பாகக் காத்திருந்து ஆவியின் ஸ்நானத்தை பெறும் வரை முதல் சீடர்கள் அந்தியோகியா சேரும்வரை காத்திருந்தார்கள். அங்கே அவர்கள் தரித்திருந்து, ஜெபித்து, உபவாசம் பண்ணி முன்னேறிச் சென்றார்கள். இந்த சகோதரர்களிடமிருந்து வல்லமையின் இரகசியத்தைக் கற்றுக்கொள்வோம். சுவிசேஷபணி செய்ய விரும்புவோர் அத்தனை பேரையும் நம்மோடு சேர்ந்து ஆவியினால் நிரம்பும்படி அழைத்து, தொடர்ந்து தேவபணி செய்ய அனுமதிப்போம்.

சபையின் தேவையும் உலகத்தின் தேவையும் தங்களில் வாசம் பண்ணும் ஆவியான கிறிஸ்துவை சாட்சிகரிப்பதும் அதை நிரூபிப்பதுமாகும். நாம் யாவரும் மேல் வீடாகிய தேவபிரசன்னத்தில் எருசலேமில் காத்திருப்போம். அந்தியோகியாவிலே பணிவிடை செய்து காத்திருப்போம். ஆதி அப்போஸ்தலர் காலத்தில் இறங்கிய வல்லமை இறங்கும். அவர் இப்போதும் அசைவாடிக் கொண்டிருக்கிறார். அவர் இப்போதும் பாவத்தை கண்டித்து உணர்த்தவும் இயேசுவை வெளிப்படுத்தவும், ஆயிரக்கணக்கான மக்கள் அவர் பாதத்தில் விழவும் செய்வார். அவர் நமக்காகக் காத்திருக்கிறார். நாம் அவருக்காகக் காத்திருந்து அவரை வரவேற்போம்.

"தேவனே, நாங்கள் உம்மை நோக்கிக் கதறுகிறோம். தமது ஆவியானவர் அனைத்துப் பிள்ளைகளையும் நிரப்புவாராக. பிதாவே! உமது ராஜ்யத்துக்காக வாழவும், உழைக்கவும், ஜெபிக்கவும், தியாகம் செய்யவும் பாடுபடவும் என்னை புதிதாக அர்ப்பணிக்கிறேன். புதிய விசுவாசத்தின் மூலம் அற்புதமான தூய ஆவியானவரையும் அவரது உள்ளான வாசத்தையும் ஏற்றுக்கொள்கிறேன். எனக்கும் அனைத்து உமது பிள்ளைகளுக்கும் தூய ஆவியைத் தரும்படி தாழ்மையுடன் கேட்கிறேன். அதன்மூலம் கிறிஸ்து அனைவரது இருதயத்தையும் வாழ்வையும் சொந்தமாக்கி அதன்மூலம் உலகம் முழுவதும் மகிமையால் நிரம்பட்டும்".

ஆவியால் வலுப்படுத்தப்பட்ட ஜெபம்

Spirit empowered Prayer

Lois J.Stucky

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" யோவா.*4:14.*

தேவன் கிருபையாக தாகமுள்ள ஆத்துமாவுக்கு அவர்களது தாகத்தைத் தீர்ப்பதற்காக மட்டுமல்ல அது வழிந்தோடி பிறருக்கும் பயன்படவேண்டும் என்று விரும்புகிறார் யோவா.*7:38,39.* இதற்காக நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் மிகக்குறைவு என எண்ணுகிறோம். ஜெபத்தின் மூலமாகவே இது சாத்தியமாகும். ஆவியால் நிரப்பப்பட்டதும் அபிஷேகிக்கப்பட்டதுமான ஜெபம் இன்று மிகமிகத் தேவை. சாத்தான் தீவிரமாக இத்தகைய ஜெபங்களை தடுக்க முயற்சிக்கிறான். நம்மில் சிலரும் கூட மாம்சத்தில் அடிக்கடி எளிதும் முயற்சியில்லாததுமான ஜெபங்களை ஏறெடுக்கிறோம் என்பது துக்கமானது. நாம் செய்ய வேண்டியது ஊக்கமான ஜெபம். "**...நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**" யாக்.5:16.

கீழ்க் குறிப்பிடப்படும் வசனம் நமக்கு அனுகூலமாயிருக்கும்; ரோமர் 8:26,27 படியுங்கள். நமது ஜெபத்தின் மூலம் நமது தேவைகளை சந்திக்க வாக்களிக்கிறார். இதை ஒவ்வொரு ஜெப வேளையிலும் பயன்படுத்தலாம். "**ஆவியில் நிரம்பியிருங்கள்**" என்று எபே.5:18-ல் படிக்கிறோம். நமது கிறிஸ்தவ வாழ்வில் எப்போதும் இப்படியிருக்க வேண்டும். ஆவியானவரின் உதவிதனைப் பெற்று ஜெபிக்க நாடுங்கள்.

உள்ளே...

கற்பாறையிலிருந்து எழும்பின அக்கினி

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

2 நாளாகமம் 7:14

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.

அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன் சங்கீதம் 91:14.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2026 மார்ச் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

வாசகர் கடிதம்

Perumalpuram, 26-1-26

Brother,

நீங்கள் செய்கிற வருகையின் தூதன் பத்திரிகை மூலம் அநேக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்று வருகிறோம் தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

நீங்கள் செய்துவரும் மகத்துவமான ஊழியங்களுக்காக ஜெபிக்கிறோம். தேவன் பெலத்தை அருளிச் செய்வாராக! நீங்கள் அனுப்பிய 2026 காலண்டர் கிடைத்தது. அதிக மகிழ்ச்சி.

Pray for India ஜெபகாலண்டரை bible-ல் வைத்து ஜெபிக்கிறோம். Rs.500/- Online மூலம் அனுப்பினோம். எங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபியுங்கள், நன்றி.

அன்புடன்,

T.N. 01607 P.K.Y.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு

யோவான் 16:33

இதைக்குறித்து எனது தகப்பனார் எழுதிய "**ராஜாதி ராஜா**" (வெளிப்படுத்தினவிசேஷம் விளக்கவுரை) என்ற புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை அச்சிடுகிறேன்.

தீர்க்கதரிசன முறையில் சிமிர்னாவின் காலம் கி.பி. 313 வரையுள்ளதாகும். அது எதுமுதல் ஆரம்பித்தது என்பதை நிதானிப்பது சற்று சிரமம். **(பேதுரு, பவுல் என்பவர்களைக் கொலை செய்த நீரோ ராயன் காலம் முதலே (கி.பி.65) அது ஆரம்பித்தது என்கின்றனர் சிலர். மிகக் கொடுமையாய்த் துன்புறுத்திய ஆறிலியஸ் காலத்திலிருந்து தான் (கி.பி.170) அது ஆரம்பித்தது என்கின்றனர் சிலர்)** யோவான் அப்போஸ்தலனைக் கொதிக்கும் எண்ணெயில் போட்டு பின்பு நாடு கடத்திய டொமிஷியன் காலம் முதல் (கி.பி. 95) அது ஆரம்பித்தது என்று கொள்வதே அதிக பொருத்தமாயிருக்கும் என்று தோன்றுகிறது. இக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பத்து அரச கட்டளைகள் பத்து அரசர்களால் பிறப்பிக்கப்பட்டன.

2026 **இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் மாற்கு 9:23.**

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0438700**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

1.	டொமிஷியன்	... கி.பி. 95-96
2.	ட்றேஜன்	... கி.பி. 104-117
3.	ஹேட்ரியன்	... கி.பி. 138
4.	மார்கஸ் ஆறிலியஸ்	... கி.பி. 161-180
5.	ஸெவறஸ்	... கி.பி. 208-211
6.	மாக்ஸிமின்	...
7.	டேஷியஸ்	... கி.பி. 250-251
8.	வலேரியன்	... கி.பி. 257-260
9.	ஆறிலியன்	... கி.பி. 270-274
10.	டயோக்ளீஷியன்	... கி.பி. 305

இவர்களில் ட்றேஜன், இக்னேஷியஸ் என்னும் பத்தனைக் காட்டு மிருகங்களுக்கு இரையாக்கினான். ஹேட்ரியன், போலி கார்ப்பைச் சுட்டெரித்தான். ஆறிலியஸ், ஜஸ்டின் மார்ட்டரைக் கொலை செய்தான். ஸெவறஸ் காலத்தில் 19000 பேர் கொலை செய்யப்பட்டனர். வலேரியன் காலத்தில் சிப்ரியன் என்னும் பத்தன் கொலை செய்யப்பட்டார். ஆறிலியன் கொடிய குரூரன்; அவன் காலத்தில் அநேகர் எரிக்கப்பட்டனர். இவ்வித பத்து உபத்திரவங்களைக் குறித்துத்தான் கர்த்தர் "பத்து நாள் உபத்திரப்படுவீர்கள்" என்றார் (2:10) என்று கருதுகின்றனர் சிலர். இவற்றில் கடைசியான உபத்திரவம் சரியாய் பத்து ஆண்டுகாலம் நீடித்தது. ஒரு வருஷத்துக்குப் பதிலாக ஒரு நாளைக் கணக்காக்கும் முறைப்படி (எசேக். 4:6) இதுவே பத்து நாள் என்னப்படுகிறது என்று கொள்வாருமுண்டு. இக்காலத்தில் கிறிஸ்தவ ஆலயங்களனைத்தையும் இடிக்கவும், வேத புத்தகங்களையெல்லாம் சுட்டெரிக்கவும், கிறிஸ்தவர்களனைவரையும் சங்கரிக்கவும் அரசு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களின் இரத்தம் ஏராளமாய் சிந்தப்பட்டது. கிறிஸ்து சபை ஒழிந்தேபோகும் என்று பலர் எண்ணினார்கள். ஆயினும் கிறிஸ்துவாகிய ஜீவனுள்ள கல்மேல் கட்டப்பட்ட சபையைப் பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளவில்லை. மத்.16:18.

236-ல் ஏற்பட்ட உபத்திரவத்தைக் குறித்து ரோமை சாம்ராஜ்யம் முழுவதிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தப்பட்டனர். சரீரத்தில் உபாதிக்கப்பட்டனர். சித்திரவதைப் பெட்டிகளிலடைக்கப்பட்டனர், கோடாரிகளால் வெட்டப்பட்டனர், தூக்கிலிடப்பட்டனர், நெருப்புக்கும் வனவிலங்குகளுக்கும் இரையாக்கப்பட்டனர், கொதிக்கும் கீல், உருகும் மெழுகு இவற்றில் இடப்பட்டனர், கூரான முளைகளாலும் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கொக்கிகளாலும் குத்தித் துளைக்கப்பட்டனர் என்று எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வித துன்பங்களால் சபை அழிந்து போகாமல், தேவ அன்பிலும் ஆவியின் வல்லமையிலும் வளர்ந்து உயிருள்ள உத்தம சபையாய்ச் செழித்தோங்கியது. கிறிஸ்து சபையின் இரகசியங்களில் ஒன்று இதுவே - துன்பப்படும் அளவுக்குத் தக்கதாக அது வளரும். சிமிர்னா காலச்சபை எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகவில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகவில்லை; அவர்களுடைய புறம்பான மனுஷன் அழிந்தும் உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டது 2 கொரி. 4:8,9,16.

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்

(மாதம் முழுவதும் 31 நாட்களும் ஜெபிப்பதற்காக ஜெப கையேடு அச்சிட்டு வருகிறோம். அதில் அச்சிடப்பட்டுள்ள 31 ஜெபக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் வெளியிடுகிறோம்)

தேதி 3

அஸ்ஸாம் (Assam)

ஜெபியுங்கள் :

முதலமைச்சர், அமைச்சர்களுக்காக, M.P., M.L.A., IAS, IPS அதிகாரிகளுக்காக, நீதித்துறை, காவல் துறை, வழக்குரைஞர்களுக்காக, ஆளுநர், மாவட்ட ஆட்சியர்களுக்காக.

2011 மக்கள் தொகை	: 3,12,05,576
2026 கணிக்கப்பட்டதொகை	: 3.75 கோடி
மாவட்டங்கள்	: 35
கிராமங்கள்	: 26,395
2011 கிறிஸ்தவர்கள்	: 3.7%
2026 கிறிஸ்தவர்கள்	: 3.74%
மக்கள் இனங்கள்	:

பிராமணர், அஹிர், ராஜ்புட், குர்மி, தேலி, அஹோம், போடோ, சுடியா, கோச் ராஜ்போங்ஷி, திமாசா, கர்பி, மிசிங், ரபா

ஜெபக் குறிப்புகள்:

1. தீவிரவாதச் செயல்கள் முடிவடைந்து சமாதானம் நிலவ
2. 1.5 கோடி அஸ்ஸாமியர்கள் மத்தியில் பணி செய்ய அதிக ஊழியர்கள் அனுப்பப்பட
3. கமக்கியா, காளிகோவில் போன்ற ஹிந்து புண்ணிய ஸ்தலங்களுக்கு வருவோர், பூசாரிகள் இரட்சிக்கப்பட

விசேஷ ஜெபக்குறிப்பு

சமீப காலமாக புதிது புதிதாக கொள்ளை நோய்க்கிருமிகள் ஜனங்களிடையே பரவி வருகிறது. இதன் முக்கிய காரணம், மனித சமுதாயத்தில் பாவங்கள் பெருகும் போதெல்லாம் கொள்ளை நோய்கள் பெருகியதை வேதத்தில் அடிக்கடி பார்க்க முடிகிறது. மனித சமுதாயத்தில் பாவங்கள் மலிந்து போன இந்த காலங்களில் தேவனின் கோபம் சமுதாயத்தின் மேலும், தேசங்களின் மேலும் உண்டாவதால் இப்படிப்பட்ட கொடிய வியாதிகளை தேவன் அனுமதிக்கிறார். பாருங்கள், முன்னெப்போதையும் விட மனிதர்கள் பாவம் செய்ய அதிகமான சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் இந்தக் காலங்களில்தான் அதிகம். இன்டர்நெட், செல்போன் என்று ஆரம்பித்து எதைத் தொட்டாலும் அதிலிருந்து பாவம் செய்யலாம் என்ற சூழ்நிலை இக்காலங்களில்தானே நிலவுகிறது.

ஆட்கொல்லி நோய்களாக அறியப்பட்டிருக்கும் ஆந்திராக்ஸ், காலரா, டெங்கு காய்ச்சல், பன்றிக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல் போன்ற வியாதிகளை கர்த்தர் கட்டுப்படுத்தவும், இதனை குணப்படுத்தும் மருந்துகளைக் கண்டறியும்படியாகவும் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக
ஜெபியுங்கள்
வருகையின் தூதன்
ஜெப நேரம்
பகல் 1.00 முதல் 2.00 வரை

சிறப்புச் செய்தி

7 அக்கினி

பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன் லூக்கா 12:49.

III. கற்பாறையிலிருந்து எழும்பின அக்கினி

1. இஸ்ரவேல் புத்திரர் பொல்லாப் பானதைச் செய்துகூர்கள்

பின்னும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் அவர்களை ஏழு வருஷம் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார்.

மீதியானியரின் கை இஸ்ரவேலின்மேல் பலத்துக்கொண்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிக் கொண்டார்கள்.

இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும்போது மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து;

அவர்களுக்கு எதிரே பாளயமிறங்கி, காசாவின் எல்லைமட்டும் நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதே போவார்கள்.

அவர்கள் தங்கள் மிருகஜீவன்களோடும், தங்கள் கூடாரங்களோடும், வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள்; அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாததாயிருக்கும்; இந்தப்பிரகாரமாக தேசத்தைக் கெடுத்துவிட அதிலே வருவார்கள்.

இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள் நியாயாதிபதிகள் 6:1-6.

2. கர்த்தர் தீர்க்கதரிசியை அனுப்பினார்

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிட்டபோது,

கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்திற்கு அனுப்பினார்; அவன் அவர்களை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நான் உங்களை எகிப்திலிருந்து வரவும், அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படவும் செய்து,

எகிப்தியர் கையினின்றும், உங்களை ஒடுக்கின யாவருடைய கையினின்றும் உங்களை இரட்சித்து, அவர்களை உங்களுக்கு முன்பாகத் துரத்தி, அவர்கள் தேசத்தை உங்களுக்குக் கொடுத்து,

நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றும், நீங்கள் குடியிருக்கும் அவர்கள் தேசத்திலுள்ள எமோரியருடைய தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றும், உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ என் சொல்லைக் கேளாதே போனீர்கள் என்கிறார் என்று சொன்னான் நியா.6:7-10.

3. கிதியோனின் அழைப்பு

அதற்குப்பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்தார்; அப்பொழுது அவனுடைய குமாரன் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான்.

கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: *பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்* என்றார்.

அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவர வில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்.

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: *உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான்* அல்லவா என்றார்.

அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்.

அதற்கு கர்த்தர்: *நான் உன்னோடே கூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறியடிப்பதுபோல நீ மீதியானியரை முறியடிப்பாய்* என்றார் நியா.6:11-16.

4. அக்கினி அடையாளம்

அப்பொழுது அவன் உம்முடைய கண்களில் இப்பொழுதும் எனக்குத் தயை கிடைத்ததானால் என்னோடே பேசுகிறவர் தேவரீர்தான் என்று எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டும்.

நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையைக் கொண்டுவந்து, உமக்கு முன்பாக வைக்குமளவும், இவ்விடம் விட்டுப் போகாதிருப்பீராக என்றான்; அதற்கு அவர்: நீ திரும்பிவருமட்டும் நான் இருப்பேன் என்றார்.

உடனே கிதியோன் உள்ளே போய், ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் ஒரு மரக்கால் மாவிலே புளிப்பில்லாத அப்பங்களையும் ஆயத்தப்படுத்தி, இறைச்சியை ஒரு கிண்ணத்தில் வார்த்து, அதை வெளியே கர்வாலிமரத்தின் கீழிருக்கிற அவரிடத்தில் கொண்டுவந்து வைத்தான்.

அப்பொழுது தேவனுடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங் களையும் எடுத்து, இந்தக் கற்பாறை யின்மேல் வைத்து ஆணத்தை ஊற்று என்றார்; அவன் அப்படியே செய்தான்.

அப்பொழுது கர்த்தருடையதூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொ ழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில் லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் துதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார்.

அப்பொழுது கிதியோன், அவர் கர்த்தருடைய தூதன் என்று கண்டு: ஐயோ, கர்த்தரான ஆண்டவரே, நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய்க் கண்டேனே என்றான்.

அதற்குக் கர்த்தர்: உனக்குச் சமா தானம்; பயப்படாதே, நீ சாவதில்லை என்று சொன்னார் நியா.6:17-23.

5. ஆவியானவரின் அபிஷேகம்

மீதியானியரும் அமலேக்கிய ரும் கிழக்கத்திப் புத்திரர் யாவரும் ஏகமாய்க்கூடி, ஆற்றைக் கடந்துவந்து, யெஸ்ரயேல் பள்ளத்தாக்கிலே பாளைய மிறங்கினார்கள்.

அப்பொழுது ***கர்த்தருடைய ஆவி யானவர் கிதியோன்மேல் இறங்கினார்;*** அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரிய ரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல் லும்படி செய்து,

மனாசே நாடெங்கும் ஸ்தானா பதிகளை அனுப்பி, அவர்களையும் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து, ஆசேர், செபுலோன், நப்தலி நாடுகளிலும் ஆட்களை அனுப்பினான்; அவர்களும் அவனுக்கு எதிர்கொண்டு வந்தார்கள் நியா.6:33-35.

6. இரட்சிப்பு கர்த்தருடையது

அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: நான் மீதியானியரை உன்னோடி ருக்கிற ஜனத்தின் கையில் ஒப்புக் கொடுக்கிறதற்கு அவர்கள் மிகுதியா யிருக்கிறார்கள்; என் கை என்னை ரட்சித்தது என்று இஸ்ரவேல் எனக்கு விரோதமாக வீம்பு பேசுகிறதற்கு இடமாகும் என்றார்.

அப்படியே அவன் ஜனங்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப் பண்ணினான்; அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: தண்ணீரை ஒரு நாய் நக்கும் பிரகாரமாக அதைத் தன் நாவினாலே நக்குகிறவன் எவனோ அவனைத் தனியேயும், குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிகிறவன் எவ னோ, அவனைத் தனியேயும் நிறுத்து என்றார்.

தங்கள் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கெடுத்து, நக்கிக்கொண்டவர்களின் லக்கம் முந்நூறுபேர்; மற்ற ஜனங்க ளெல்லாம் தண்ணீர் குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிந்தார்கள்.

அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: நக்கிக் குடித்த அந்த முந்நூறு பேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன், மற்ற ஜனங்களெல் லாரும் தங்கள் தங்கள் இடத்திற்குப் போகக்கடவர்கள் என்றார் நியா.7:2-7.

7. எக்காளங்களை ஊதினார்கள்

மூன்று படைகளின் மனுஷரும் எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்து, தீவட்டிகளைத் தங்கள் இடது கைகளிலும், ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு, ***கர்த்தருடைய பட்டயம் கிதியோ னுடைய பட்டயம்*** என்று சத்தமிட்டு,

பாளயத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நின்றார்கள்; அப்பொழுது பாளையத்தில் இருந்த வர்கள் எல்லாரும் சிதறிக் கூக்குரலிட்டு, ஓடிப்போனார்கள்.

முந்நூறு பேரும் எக்காளங்களை ஊதுகையில், கரத்தர் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாய் ஓங்கப்பண்ணினார்; சேனை யானது சேரோத்திலுள்ள பெத்சித்தா மட்டும், தாபாத்திற்குச் சமீபமான ஆபேல்மேகோலாவின் எல்லை மட்டும் ஓடிப்போயிற்று நியா.7:20-22.

பின்னும் நான் என்ன சொல் லுவேன்? ***கிதியோன், பராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல்*** என்பவர் களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது.

விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்.

அக்கினியின் உக்கிரத்தை அவித் தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார் கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நிய ருடைய சேனைகளை முறியடித்தார்கள் எபி.11:32-34.

ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற் றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவா சத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமை யோடே ஓடக்கடவோம் எபி.12:1

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

வங்கி வழியாக காணிக்கை அனுப் பினால் தயவாய் உடனே தெரிவியுங்கள் பத்திரிகை வரத்தவறினாலும் தகவல் தாருங்கள், உடனே அனுப்புவோம்.

Mobile : **95432 21008**
: **94897 40295**
e-mail : **varukayinthoothan@hotmail.com**

விசுவாசியில் தூய ஆவியின் வல்லமை

The Holy spirit's power in the believer

R.A.Torrey

(சென்ற மாத தொடர்ச்சி)

11. கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைப் பூட்டுகிறவர் தூய ஆவியானவர் மட்டுமே:-

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே, எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்க ளுக்கு நினைப்பூட்டுவார்" யோவா.14:26.

இந்த வாக்குத்தத்தம் அப்போஸ் தலருக்குக் கொடுக்கப்பட்டது. அதே பணியை தூய ஆவியானவர் செய்கிறார். அதற்கு விசுவாசி இதை எதிர்பார்க்க வேண்டும். நமக்குத் தேவை ஏற்படும் போது, அது சொந்த வாழ்விற்காகவோ அல்லது சேவைக்காகவோ இருந்தாலும் தூய ஆவியானவர் கிறிஸ்துவின் போத னைகளை நமக்கு நினைப்பூட்டுகிறார்.

12. தூய ஆவியானவர் (a) தேவனுடைய ஆழமான விஷயங்களை அவை இயற்கை யான மனிதனுக்கு பைத்தியமாகவும் மறை பொருளாகவும் இருந்தாலும் வெளிப்படுத் துகிறார். (b) தனது வெளிப்பாடுகளை விளக்கவோ அல்லது அறிந்துகொள்ள வல்லமை கொடுக்கவும் அவர் போதித்த வைகளை அறிந்து கொள்ளவும்:-

"நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந் திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியே யன்றி எவன் மனுஷரிலுள்ளவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக் குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப் பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனி லிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவை களை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறோம். ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள் ளான்; அவைகள் அவனுக்குப் பைத்திய மாகத் தோன்றும்; அவைகள் ஆவிக் கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்" 1கொரி. 2:10-14.

அவர் வெளிப்படுத்தலாகிய எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு காரணர் மட்டுமல்ல, அவர் வெளிப்படுத்தின வைகளை விளக்குகிறவருமாயிருக் கிறார். புத்தகத்தை இயற்றியவர் அதை விளக்கும்படி நம் அருகில் இருப்பது எத்தனை மகிழ்ச்சியும் அனுகூலமு மானது! தூய ஆவியாகிய ஆக்கியோன்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் வேத புத்தகத்தைப் படிக்கும் போது நம் அருகிலிருந்து அதை நமக்கு விளக்கித் தருகிறார்.

வேத புத்தகத்தைப் புரிந்து கொள்ள அவரை நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். அப்போது இருளான பகுதிகள் தெளிவாகி விடும். "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு என் கண்களை திறந்தருளும்" சங்.119:18.

வேத புத்தகத்தைப் பற்றிய வெளிப்படையான அறிவு மட்டும் நமக்குப் போதாது. தூய ஆவியானவரின் உள்ளான ஒளியூட்டம் அதைப் புரிந்து கொள்ள உதவி செய்ய வேண்டும். ஆவிக்குரிய வெளிப்படுத்தலை இயற்கையான புரிந்து கொள்ளுதல் மூலம் அறிந்து கொள்ள முயற்சிப்பது தவறு.

தேவ வசனத்தைப் புரிந்துகொள்ள நமது ஞானத்தை சார்ந்திருப்பது தவறானது. நாம் நம்மை வெறுமையாக்கி தேவ ஆவியின்மீது சார்ந்து அவர் நமக்கு அறிவிப்பதை நாட வேண்டும். நமது ஞானத்தை நாம் தள்ளி வைக்கும்போது தான் தேவ ஞானத்தைப் பெற முடியும் 1கொரி.3:18; 1:25-28; மத்.11:25.

13. தூய ஆவியானவர், விசுவாசி 'வல்லமையில்' அவன் போதிக்கப்பட்ட சத்தியத்தை பிறரோடு பகிர்ந்து கொள்ள உதவி செய்கிறார்:-

"சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்த போது, தேவனைப் பற்றிய சாட்சியைத் சிறந்த வசனிப்போடாவது, ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும், பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும் படிக்கு, என் பேச்சும், என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள தாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" 1கொரி.2:1-5.

முதலாவது தூய ஆவியானவர் சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துவதோடு இரண்டாவதாக அதை அவர் நமக்கு விளக்கித் தருகிறார். மூன்றாவதாக தூய ஆவியானவர், பயனுள்ள விதமாக பிறரோடு சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ள உதவி செய்கிறார். அவர் நமக்கு எப்போதும் தேவை.

ஊழியத்தில் தோல்விக்கு மிகப் பெரிய காரணமாயிருப்பது, அது ஊழியமாகவோ சேவையாகவோ இருந்தாலும் வெற்றி போலிருக்கும் இடங்களில் **'மனித ஞான வார்த்தைகளை பயன்படுத்துவது'** ஆகும். அது மனித விவாதம் அல்லது பேச்சுவன்மை, ஆனால் தேவையானது தூய ஆவியானவரின் வல்லமை. அவர் எப்படிப் பேச வேண்டும், என்ன பேச வேண்டும் என்று போதிக்க வேண்டும். அவரே வல்லமையும் செய்தியுமாயிருக்கிறார்.

14. தூய ஆவியானவர் விசுவாசியை ஜெபத்தில் வழிநடத்துகிறார்:-

"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகாபரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி..." யூதா.20.

சீஷர்களுக்கு ஜெபம் பண்ணுவது எப்படி என்று தெரியாதபடியால் இயேசுவிடம் வந்து, **"...நீரும் எங்களுக்கு ஜெபம் பண்ண போதிக்க வேண்டும்"** என்று யோவான் கேட்டான் லூக்.11:1. **"நாம் ஏற்ற படி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால்..."** ரோ. 8:26. நமக்கு உதவி செய்யும் ஒருவர் இருக்கிறார் யோவா. 14:16-17. **"... ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்"** ரோ. 8:26. அவர் நமக்கு ஜெபிக்கக் கற்றுத் தருகிறார்.

ஜெபம் என்பது **'ஆவியில் ஜெபிப்பது'** அதாவது தூய ஆவியானவரின் தூண்டுதல் மற்றும் வழி நடத்துதலின்படி ஜெபிப்பது. ஜெபிப்பதற்காக நாம் தேவ சன்னிதானத்தில் வரும் போது நம்முடைய பெலவீனம், அறிவீனம் ஆகியவற்றை உணர்ந்து, நமது முற்றிலும் இயலாமையை உணர்ந்து தூய ஆவியானவரை நோக்கி நமது ஜெபங்களை திசைகாட்டி வழி நடத்தி நாம் உச்சரிக்க வேண்டியவைகளை சரியாக ஏறெடுக்க அவரிடம் நம்மை ஒப்படைக்க வேண்டும். அவருக்காகக் காத்திருந்து நம்மை அவருக்கு முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டும். தேவனாகிய தூய ஆவியானவர் தூண்டுகிற ஜெபம்தான் பிதா பதிலளிக்கிற ஜெபமாயிருக்கிறது.

15. தூய ஆவியானவர் நன்றி கூறும்படி போதிக்கிறார்:-

"துன்மார்க்கத்திற்கு ஏதுவான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, எப்பொழுதும், எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்தரித்து..." எபேசி.5:18-20. ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வின் மிக முக்கிய ஒரு குணாதிசயம் நன்றி செலுத்துவதாகும்.

16. தூய ஆவியானவர் விசுவாசியின் இருதயத்தில் கிறிஸ்துவை ஆராதிக்கத் தூண்டுதல் ஏற்படுத்தி அது ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாகச் செய்கிறார்:-

"ஏனெனில் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" பிலி.3:3.

ஆராதனை என்பது சிருஷ்டி தேவனோடுள்ள உறவை காண்பிக்கும் திட்டமான செயல். அது தேவனுக்கு முன்பாகப் பணிந்து அவரை தியானித்து அவரையே தேவனாக ஒப்புக்கொள்ளும் செயல். "நமது ஜெபங்களில் நமது தேவைகள்தான் நிறைந்திருக்கின்றன. நமது நன்றி சொல்லுதலில் நமது ஆசீர்வாதங்கள்தான் அடங்கியிருக்கின்றன. ஆனால் நமது ஆராதனையில் தேவனே இருக்கின்றார்" என்று ஒருவர் கூறுகிறார். தூய ஆவியானவர் முன்னின்று நடத்தாத எந்த ஆராதனையும் உத்தமமும் ஏற்புடையதுமல்ல.

17. தூய ஆவியானவர் ஒரு வழி காட்டியைப் போன்ற வல்லமையுடையவர்:-

"அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிற போது, பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை அனுப்பினார்கள். அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டு செலூக்கியா பட்டணத்துக்கு வந்து கப்பல் ஏறி அங்கிருந்து சீப்புரு தீவுக்குப் போனார்கள்" அப்.13:2-4.

பரிசுத்த ஆவியானவர் மக்களை அழைத்து குறிப்பிட்ட வழிகளிலே வேலை செய்ய அனுப்புகிறார். அவருடைய அழைப்பை நாம் எப்படிப் பெற்றுக்கொள்வோம்? அதற்கு வாஞ்சை வேண்டும். அதை நாட வேண்டும். எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். தேவன் மிகவும் மெல்லிய குரலில் சில வேளைகளில் பேசுகிறார். கவனிக்கிற காதுகளுக்கு மட்டுமே அது வந்துசேரும். அவர் விரும்பும் இடத்திற்குச் செல்ல உங்களை தத்தம் செய்வீர்களா?

அனுதின வாழ்விலும் சேவையிலும் ஒவ்வொருபடியிலும் அவர் நடத்துகிறவர். எங்கு செல்ல வேண்டும், எங்கு செல்லக்கூடாது என்பதெல்லாம் அவர் அறிந்திருப்பவை. எதைச் செய்வது எதைச் செய்யலாகாது என்பதெல்லாம் அவர் தெரிந்திருப்பவை. எனவே அவரது தவறாத நடத்துதல் ஒவ்வொரு திருப்பத்திலும் நமக்கு வேண்டும்.

18. கிறிஸ்துவுக்காக சாட்சியாயிருக்க தைரியமளிக்க தூய ஆவியானவர் வல்லமையுடையவர்:-

"அவர்கள் ஜெபம் பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்" அப்.4:31.

அனேகர் இயற்கையாகவே மென்மையானவர்கள். அவர்கள் தேவனுக்காக எதையாவது செய்யவேண்டுமென்றால் பயப்படுகிறார்கள். தூய ஆவியானவர் நம்மை தைரியமுள்ளவர்களாக்குகிறார். அதற்கு நீங்கள் அவரை நோக்கிப் பார்ப்பதும் அவரை நம்புவதும் அவசியம்.

தேவனுடைய பரிபூரண ஏற்பாடுகள்

விசுவாசிக்குள் தூய ஆவியானவர் செய்யக்கூடிய வல்லமையான இருகாரியங்கள் விளக்கப்பட்டுள்ளன. முதலாவது கிறிஸ்தவ வாழ்விலும்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவையிலும் ஆவியானவரை முற்றிலும் சார்ந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக அவரது ஏற்பாடுகள் விசுவாசியின் வாழ்விலும் சேவையிலும் அளித்திருக்கிறார். நாம் இயற்கையில் முக்கியமானவர்களல்ல, ஆனால் அவரை நாம் அனுமதிக்கும்போது பெரிய காரியங்களைச் செய்ய முடியும்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது சாதாரணமான ஒரு மனநிலையோடு வாழ்வதல்ல. கிறிஸ்தவ பணி என்பதும் இயற்கையான தன்மையுடன் செய்யப்படுவதல்ல. ஆவியானவரின் உலகத்திலேயே கிறிஸ்தவன் வாழ வேண்டும். கிறிஸ்தவ பணியும் ஆவியானவரின் வல்லமையுடன் செய்யப்படவேண்டும். அவரது முழு பணியையும் நாம் செய்ய நம் அனைவரையும் தூய ஆவியானவர் எதிர் பார்க்கிறார். அவர் செய்ய அனுமதிக்கும் யாவற்றையும் அவர் நம் ஒவ்வொரு வருக்கும் செய்வார்.

நாம் அவரது சித்தத்தை செய்து கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். நமது திட்டம் அவருடைய சித்தம் என்று எண்ணி, நமது இஷ்டப்படி சென்று தோல்விதனை தழுவுகிறோம்.

மேரி மான்சன் மற்றும் தேவனுடைய உத்தமம் - பகுதி 5

Marie Monsen and the faithfullness of God - Part 5

Marie Monsen

1929-ல் மேரி மான்சன் என்ற நார்வேஜியன் மிஷனெறி கர்த்தருடைய கட்டளைப்படி ஒரு நீராவிக்கப்பலில் சீன கடற்கரை வழியாகப் பிரயாணம் பண்ணியபோது அந்தக்கப்பல் கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்டது. மேரி மட்டுமே அன்னிய நாட்டைச் சேர்ந்த வராக அக்கப்பலில் பிரயாணம் செய்தார். மற்ற அனைத்து பிரயாணிகளின் உடைமைகள் அவர்கள் அறைகளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. ஆனால் மேரி ஒரு சிறிய அறையில் ஒரு சிறிய கட்டணம் கொடுக்கப்பட்டு இரண்டாம் தலைவனின் உதவியால் அங்கு தங்கியிருந்தாள். அந்த அறை தேவனால் அருளப்பட்டது என்று அவள் நம்பினாள். ஆண்டவர்தான் இந்தக் கப்பலில் அவர் பிரயாணம் பண்ண ஒழுங்குபண்ணினார் என்பது அவளது நம்பிக்கையாயிருந்தது. தேவன் அந்தக் கொடிய கொள்ளையர்கள் முன்பாகவும் பிற பிரயாணிகள் முன்பாகவும் மகிமைப்படுவார் என்றும் அவள் எண்ணினாள். தொடர்ந்து நடந்த சம்பவங்களை மேரியின் வாயால் கேட்கலாம்.

இவ்வாறு சிறைபிடிக்கப்பட்ட இருபத்துமூன்றாவது நாள் ஞாயிற்றுக் கிழமையாக இருந்தது. அன்று பிற்பகல் மூன்று மணிக்கு வெடிச்சத்தங்கள் கேட்டன. "அதன் பொருள் நாங்கள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டோம்" என்பதை நான் சத்தமாகக் கூறினேன். வெடிச்சத்தங்களுக்குப் பிறகு பலர் ஓடும் சத்தம் கேட்டது. விரைவில் கொள்ளையர்கள் பெரும்பாலும் கப்பலை விட்டுச் சென்றுவிட்டனர். கப்பல் தலைவன் அறைக்கு வெளியே வரவழைக்கப்பட்டான். கப்பல் முன்னேறத் தொடங்கியது. பீரங்கி வள்ளம் தொடர்ந்து வந்தது.

விரைவில் பீரங்கி வள்ளம் எங்களைப் பாதுகாக்கிறது என்பதைக் கொள்ளையர்கள் கண்டு கொண்டனர். பீரங்கி சத்தம் முதல் முதலில் கேட்டதிலிருந்தே கொள்ளையர்கள் திரும்பத் திரும்ப இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்:

"நாம் இந்த அந்நிய தேசத்துப் பெண்ணை நம்மோடு கொண்டு செல்ல வேண்டும். நாம் இந்த பெண்ணில்லாமல் போகவே முடியாது. அவர்கள் இந்தப் பெண்ணைப் பார்க்கும்போது துப்பாக்கியை பயன்படுத்தத் துணியவே மாட்டார்கள்"

கடைசியாக நான் கேட்ட வார்த்தை "இந்த சூழ்நிலையில் இந்த அயல்நாட்டுப் பெண்ணை எடுத்துச் செல்வதால் எந்த பயனுமில்லை, இருபத்து மூன்று நாட்களாக அவள் எதுவும் சாப்பிடவில்லை, அவளால் நடக்கவே முடியாது. நாமோ இப்போது ஓட வேண்டிய நிலையிலிருக்கிறோம்". கொள்ளையர்கள் கப்பலை விட்டு இறங்கிச் சென்றனர்.

நான் கப்பலின் மேல்தளத்திலிருந்தேன். திடீரென கப்பல் தலைவன் கப்பலைத் திருப்பினார். நாங்கள் கீழ்நோக்கி பீரங்கி படகிற்கு நேராகச் சென்றோம். ஏற்கெனவே சில கொள்ளையர்கள் வெகுதூரம் சென்றுவிட்டனர். அவர்கள் தங்கள் ஜீவனைப் பாதுகாக்க ஓடிக்கொண்டிருந்தனர்.

நான் அவர்கள் மத்தியில் செய்த பணி முடிந்துவிட்டதை எண்ணி பெருமூச்சு விட்டேன். அவர்களில் சிலராவது இரட்சிக்கப்பட விரும்பி அவர்களோடு செல்ல விரும்பினேன். ஆனாலும் வேதபுத்தகமும் அதன் வாக்குத்தத்தங்களும் என்னை உற்சாகப்படுத்தின. அவற்றையே சார்ந்து வாழ விரும்பினேன்.

அப்படி சிந்தனையில் அதிக நேரம் நிற்க வாய்ப்பிருக்கவில்லை. பிரயாணிகள்! நான் கீழே இறங்கி அவர்களைப் பார்க்க வேண்டும். அவர்கள் கல் உருவங்களைப் போல தங்கள் தலைகளைக் கீழே நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தனர். நான் ஏணிப்படிகளில் நின்று கொண்டு "மேலே வாருங்கள் கொள்ளையர்கள் யாவரும் போய்விட்டார்கள்" என்றேன். ஆயினும் ஒருவரும் அசையவோ, மேலே பார்க்கவோ இல்லை. நான் மறுபடியும் மறுபடியும் என் வார்த்தைகளைக் கூறினேன். ஆயினும் அவர்கள் இன்னும் அமைதியாக அசைவின்றி இருந்தார்கள். "நான் ஒரு அயல்நாட்டுப் பெண், மேலே வாருங்கள், வாருங்கள்" என்று கூறினேன். இப்போது அவர்கள் விழித்தெழும்பி அனைவரும் கப்பல் மேல் தளத்துக்கு வந்து கொள்ளையர்கள் ஓட்டமாக ஓடுவதைக் கண்டனர். சந்தோஷத்தால் சிரிப்பும் அழுகையும் அவர்களிடம் ஏற்பட்டது. அவர்கள் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். சந்தோஷம் அவர்களை நிரப்பியது.

"இருபத்து மூன்று நாட்களாக நாங்கள் எங்கள் இருதயத்தில் ஒரு வாளுடன் உட்கார்ந்திருந்தோம்" என்று அவர்கள் கூறினர்.

கொள்ளையர்கள் பிரயாணிகளில் இருபது பேரை அவர்களுடன் எடுத்துச் சென்றனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். அவர்கள் அதே மாலைப் பொழுதில் திரும்ப வந்து விட்டனர். இந்த பனிரெண்டு பெண்களும் ஒவ்வொரு நாளும் கொள்ளையர் ஒப்பியத்தால் மயங்கித் தூங்கிய வேளைகளில் எனது அறைக்கு வந்தவர்கள். தேனீர் பையன் மூலமாக எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டன. பகற் பொழுதில் அது எனக்கு மிக்க நல்ல வேளையாக இருந்தது. இதற்கு முன்னால் எவரும் சுவிசேஷத்தைக் கேட்டதில்லை. இப்போது அவர்கள் குழப்பத்தில் இருந்த படியால் அவர்கள் இருதயம் திறந்திருந்தது.

திருப்பிவந்த பெண்கள் என்னிடம் ஓடி வந்து ஆவலோடு இவ்வாறு கூறினார்கள்: "நாங்கள் இந்த அயல் நாட்டுப் பெண்ணின் கடவுள் எங்களை விடுவிக்கும்படி ஜெபித்தோம்; அவர் அவ்வாறே எங்களை விடுவித்துவிட்டார்". அவர்கள் முகங்கள் பிரகாசித்தன. அதற்குப்பின் நாங்கள் இணைந்து அந்த அறையில் கர்த்தரைத் துதித்தோம்.

பின்பு சில மனிதர் என்னிடம் கொள்ளையர்கள்தான் அயல்நாட்டு பெண்ணிற்கு அந்த அறையை ஒழுங்கு பண்ணியிருக்கிறார்கள். "இங்கு பிரவேசிக்க வேண்டுமானால் எனது மரித்த சடலத்தைத் தாண்டிதான் செல்ல வேண்டும்" என்று அத்தலைவன் கூறியிருக்கிறான். இந்த விளக்கங்களைக் கேட்டபோது எனது கைக்கடிகாரத்தைத் திரும்பக் கொண்டு வந்த கொள்ளையன்தான் இப்படிக் கூறியிருக்க வேண்டும், அவன் அதை நான் ஆச்சரியப்படும்படி திரும்பக் கொடுத்தபோது, அவனிடம் கப்பலில் இருக்கும் சில பெண்களைப் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ளவும் அவர்களுக்கு எந்தத் தீங்கும் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் கூறினேன்.

தொடர்ந்து சில நாட்கள் சகபிரயாணிகளுடன் பயணம் அற்புதமாக இருந்தது. அவர்கள் இருதயங்கள் திறந்திருந்தன. என்னிடமிருந்த கைப்பிரதிகளையும், வேதத்தின் பகுதிகளையும் போட்டி போட்டு எடுத்துக் கொண்டார்கள். "எங்கள் தாயார் இந்தக்கப்பலில் இருப்பது போல் நாங்கள் உணருகி

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றோம்" என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் நான் கேட்ட மிக நல்ல காரியம்: "உங்கள் தேவன் இச்சூழலில் உங்களைப் பாதுகாத்து உதவி செய்திருக்கிறார்; அதை நாங்கள் கண்டுகொண்டோம், ஆனால் எங்களுடைய எந்த தெய்வமும் எங்களுக்கு உதவி செய்யவில்லை" என்பதாகும். தேவனுக்கே மிகுந்த நன்றி.

கடைசியாக இருபத்தேழு நாட்களுக்குப் பின் நாங்கள் சேரவேண்டிய இடத்தில் இறங்கினோம். ஆனால் அந்த மாகாணத்தில் போர் நடந்து கொண்டிருந்தது. பீரங்கி சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. துறைமுகத் தலைவர் வந்தார். அவர் ஒரு கிறிஸ்தவர். அங்கு இறங்குவது முடியாதது என்று கூறிவிட்டு விசாரிப்பதற்காகச் சென்றார். சில மணி நேரங்களுக்குப் பிறகு அவர் திரும்பி வந்தார்.

"நீங்கள் இந்தக் கப்பலில் நீண்ட கால பிரயாணம் செய்திருக்கிறீர்கள்; இப்போது இரண்டு மணிநேரங்களுக்குள் மஞ்சூரியாவிலுள்ள டெய்ரெனுக்குச் செல்லும் ஒரு வள்ளம் தயாராக இருக்கிறது. அதில் ஒரு முதல் வகுப்புக் கட்டணம் எடுத்திருக்கிறேன். இதோ அந்த டிக்கட்; அதற்குக் கட்டணம் செலுத்திவிடடேன். இந்த டிக்கட்டை உங்களிடம் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அது எனது சிலாக்கியம். இந்த மாகாணத்தில் வசிக்கும் மக்கள், நீங்கள் சந்தித்தவர்களைவிட வித்தியாசமானவர்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக".

எதிர்பார்க்கப்படாத விருந்தாளியாக டெய்ரனிலுள்ள டானிஷ் மிஷனெறிகளின் இல்லத்தில் போய்ச் சேர்ந்தேன். அங்கு எனக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. சில வார்த்தைகளை மட்டும் நாங்கள் பரிமாறிக் கொண்டபின்பு எமில் ஜென்ஸனும் அவரது மனைவியும் "இப்போது உண்மையாகவே நாம் ஆண்டவரை அவரது இரக்கத்துக்காகத் துதிக்க வேண்டும்" என்றார்கள். நாங்களும் அப்படியே துதித்தோம். முழு இருதயத்தோடும் துதித்தோம். பின்பு குளித்து, சாப்பிட்டு, நல்ல கரிசனையோடு படுக்கைக்குச் சென்றோம். இவற்றில் பரிசுத்தவான்களின் கூட்டுறவு தான் எல்லாவற்றிற்கும் மேலானதாயிருந்தது.

சிறை பிடிக்கப்பட்டிருந்த போது, ஒரே முக்கியமான சோதனை என்னவெனில் எனது பெற்றோர் இந்த வருத்தத்தை எப்படி சகிப்பார்கள் என்பது தான். இருவரும் எண்பது வயதைத் தாண்டியவர்கள். எனது தாயார் மிகவும் மென்மையானவர்கள். "இதைக் கேட்டதும் உனது தாயார் மரித்து விழுவார்கள்" என்ற சத்துருவின் குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அதே வேளையில் "எதற்கும் கவலை வேண்டாம்" என்ற தேவ குரலும் தொடர்ந்து அமைதலாகவும் திடமாகவும் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது. "நான் உமது வசனத்துக்குக் கீழ்ப்படிவேன் கர்த்தாவே, எதற்கும் கவலைப்படமாட்டேன்" என்று உறுதியுடனிருந்தேன். தேவன் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டார்.

ஒருநாள் நார்வேயில் பெர்கென் என்ற இடத்தில் வீட்டில் செய்தித்தாளில் ஒரு இளம் மிஷனெறியாகிய Miss மான்சன் சீனாவில் கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டுவிட்டதாக செய்தி வந்தது. என் பெற்றோர் இந்தச் செய்தியை படிக்குமுன்பதாக என் இளைய சகோதரி அதை முதலில் கண்டு என் பெற்றோருக்கு வாசித்து காண்பிக்க ஓடிச்சென்றாள். ஆனால் தாயார்: "மேரி அதிக காலம் சீனாவில் ஊழியம் செய்த படியால் அந்த மக்கள் மேரியை நன்கு அறிவார்கள்" என்று கூறிவிட்டார்கள்.

ஆனால் தாயாரிடம் சிறைபிடிக்கப்பட்டது அவர்களது மகள்தான் என்று கூறியபோது: "அது ஒரு இளம் மிஷனெறி அல்ல என்பது நல்ல காரியம்" என்றார்கள். அவர்கள் விழுந்து மரிக்கவில்லை. அதற்குப் பின்பு பனிரெண்டு ஆண்டுகள் வாழ்ந்தார்கள்.

ஒரு முழு வாரத்திற்கு முன்னே எனது விடுதலை செய்தி கேபிள் மூலமாக நார்வே மற்றும் பலநாடுகளை எட்டியது. நார்வேஜியன், அமெரிக்கன் மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்கள் ஷான்டங் கவர்னரை எனது விடுதலைக்காக மறுபடியும் மறுபடியும் நினைவுபடுத்தியதற்காக உயிரோடு காப்பாற்றினர். கவர்னரும் அழுத்தங்களால் சோர்புற்று எளிய முறையில் நான் விடுதலை பெற்றதை ஒரு ரேடியோ செய்தி மூலமாக அறிவித்தனர்.

நான் விடுதலை பெற்றதற்கான ஸ்தோத்திரக்கூடுகைகள் நார்வேயிலும் மற்ற நாடுகளிலும் நடத்தப்பட்டன. ஆனால் நான் இன்னும் கைதியாகவே கடின நாட்களைக் கடந்து கொண்டிருந்தேன். இந்த ஸ்தோத்திர கூட்டங்கள் சீனாவில் அற்புதமான வல்லமையையும் ஆசீர்வாதத்தையும் தந்தன. இந்நாட்களில் நான் விவரிக்க முடியாத அமைதலான வழிந்தோடும் சந்தோஷத்தையும் பெற்றேன். என் இதயம் எனக்குள் பாடினது. நாள் முழுவதும் தேவனைத்துதிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. ஆயினும் அந்நாட்கள் மிகுந்த சோதனையின் நாட்களாகவே இருந்தன. துதிகள் துன்பங்களிலிருந்து என்னை தூக்கிச் சென்றன.

சிறையிருப்பின்போது மேரி மான்சன் இவ்வாறு எழுதினார்கள்: "இந்த அனுபவத்திற்காக நான் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். இந்த அனுபவம் எனது நன்மைக்காகவும் அனேகருடைய நன்மைக்காகவும் இணைந்து கிரியை செய்யும். இயேசுவே வெற்றி வீரர். அவர் என்றும் என்னோடிருக்கிறார். நமது விசுவாசம்தான் உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்".

"**தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூல மானதுணையுமானவர்**" சங்.46:1.

தூய ஆவியானவரின் சுத்திகரிக்கும் கிரியை

The Sanctifying work of the Holy Spirit

Charles H. Spurgeon

கிறிஸ்துவிடமிருந்து ஒரு விசுவாசி பெறக்கூடிய யாவும் கிருபையின் ஆவியானவர் மூலமாகவே வருகிறது. மேலும் அனைத்து ஆசீர்வாதங்களும் தூய ஆவியானவர் மூலம் பாய்ந்து வருவதுபோல சுத்திகரிக்கும் ஆவியானவரின் கிரியை இன்றி நல்ல வைகளோ, பரிசுத்த எண்ணங்களோ, பக்தியுள்ள ஆராதனையோ, இரக்கமான செயல்களோ வெளிவர முடியாது. நல்ல விதைகள் உங்களில் விதைக்கப்பட்டிருந்தாலும் அவர் கிரியை செய்யாவிடில் அது கிரியை செய்வதில்லை.

உங்கள் நாவினை தூய ஆவியானவர் தொடாமல் இயேசுவுக்காக நீங்கள் எப்படி பேச விரும்புவீர்கள்? நீங்கள் ஜெபிக்க விரும்புகிறீர்களா? ஆவியானவர் உங்களுக்காக மன்றாடாவிட்டால் நீங்கள் எப்படி ஜெபிக்க முடியும்? பாவத்தைக் கீழ் அடக்க விரும்புகிறீர்களா? தூய்மையாய் வாழ விரும்புகிறீர்களா? உங்கள் எஜமானைப் போல நடக்க விரும்புகிறீர்களா? ஆவிக்குரிய உன்னத நிலையை அடைய வேண்டுமா? தூதர்களைப் போல தேவனை உற்சாகமாகப் பாட விருப்பமா? இவற்றிற்கெல்லாம் தூய ஆவியானவரின் ஒத்தாசை வேண்டும்.

மெய்யான திராட்சச்செடியின் கொடிகளே, அவருடைய சாரமின்றி நீங்கள் கனிகொடுக்கக்கூடாது. தூய ஆவியானவர் மூலமாக தேவன் அளிக்கும் ஜீவனில்லாமல் உங்களில் ஜீவனில்லை. எனவே நமது பாவங்கள் மூலம் அவருக்கு எரிச்சல் உண்டாக்க வேண்டாம் எபேசி.4:30. அவருக்கு அனைத்துக் காரியங்களிலும் கீழ்ப்படிதலுடனிருப்போம்.

தூய ஆவியானவர் இத்தனை வலிமையுடையவராயிருந்தால், அவரின்றி எதையும் செய்யத் துணிய வேண்டாம். எதையும் ஆரம்பிக்கவும் முடிக்கவும் வேண்டாம். அவரது ஆசீர்வாதத்துடன் எல்லாவற்றையும் ஆரம்பித்து முடிப்போம். அவருக்கும் செலுத்தவேண்டிய கனத்தை செலுத்துவோம். நாம் மிகவும் பெலவீனர். அவரையே சார்ந்து வாழுவோம். நாம் இவ்வாறு ஜெபிக்க ஆரம்பிப்போம்: "தேவனே, என் இருதயத்தையும் முழுமையையும் நீர் வந்து வாசம் பண்ண திறந்தருளும். எனது உள்ளான பகுதிகளில் உமது ஆவியை நான் பெற்றுக் கொள்ளும்போது நான் உம்மால் தாங்கப்படுவேனாக".

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். கொலோ.4:2

ஆவியால் நடத்தப்படுதல்

Led by the spirit

Oswald J.Smith (1889-1986)

"அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை அனுப்பினார்கள்" அப்.13:2-4.

எப்படி தூய ஆவியானவர் பர்னபாவையும் சவுலையும் அழைத்தாரோ அப்படியே அவர் இன்று நம்மையும் அழைக்கிறார். நாம் கீழ்ப்படிந்து அமைதியாக அவருக்கு முன்னிருந்தால் அவரால் நடத்தப்படுவோம். பர்னபாவும் சவுலும் கர்த்தருக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜெபித்துக்கொண்டும் உபவாசித்துக் கொண்டுமிருந்தார்கள். உலகம் அவர்களுக்கு முற்றிலும் அடைக்கப்பட்டிருந்தது. ஆவியானவரின் உள்ளத்தை அறிய அவர்கள் காத்திருந்தார்கள். அந்த மனநிலைக்கு தேவ பிள்ளைகள் வரும் போது தூய ஆவியானவர் தமது சித்தத்தினை வெளிப்படுத்தி, தேவன் தெரிந்து கொள்பவர்களை அழைப்பார்.

நாமோ அதிக வேலைப்பழுவுடனிருக்கிறோம். நாம் அதிக வேகமாக வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம். அவருக்கு முன்பாக அமைதியாயிருப்பதைக் குறித்து இன்னும் நாம் கற்றுக் கொள்ளவில்லை. நாம் அவரது சத்தத்தைக் கேட்க முடியவில்லை; ஆக நாம் அவரது சித்தத்தை செய்து கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறோம். நமது திட்டம் அவருடைய சித்தம் என்று எண்ணி, நமது இஷ்டப்படி சென்று தோல்விதனை தழுவுகிறோம்.

ஆயினும் ஆசீர்வதிக்கப்பட்ட தூய ஆவியானவரை தெரிந்து கொள்ளும் அதிகாரமுடையவராக, பேசவும் அனுப்பவும் கூடியவர் ஒரு கட்டளையிடுபவராக நமது வாழ்வில் இருக்கிறார். நமது ஊழியங்களில் தேவனுடைய திட்டத்தை அறிவிக்க ஆவலோடு காத்திருக்கிறார்; ஆனால் நாம் கேட்கிறதில்லை.

மெய்யான திராட்சச்செடியின் கொடிகளே, அவருடைய சாரமின்றி நீங்கள் கனிகொடுக்கக்கூடாது.

ஆதித்திருச்சபை காலத்தில் ஆவியானவர் அதிகமாய்க் கிரியை செய்தார். அப்போது அவருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இன்று அவர் அவ்வாறு செயல்படமுடியவில்லை. அவரது மதிப்பு குறைக்கப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டுவிட்டார். அவருடைய திட்டத்திற்கு மேலாக மனிதன் திட்டமிடுகிறான். சுயம் அவருக்குப் பதிலாக செயல்படுகிறது. எனவே அவர் எதையும் தெரிந்தெடுக்கவோ யாரையும் அழைக்கவோ தரிப்பித்து அனுப்பவோ முடிவதில்லை.

ஆனால் அவர் இன்னும் விரும்புவது அவரது பணியாயிருக்கிறது. நம் ஒவ்வொருவரையும் பேர்பேராக அறிவார். நாம் நம்மை அவருக்கு அர்ப்பணித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து அவரது திட்டம் மாத்திரம் நிறைவேற ஆதரவாயிருப்போம்.

ஆதித்திருச்சபையில் பெரிய எழுப்புதல் நடந்தேறியது. சபைகள் துளிர்த்தன. ஆத்துமாக்கள் எங்கும் இரட்சிக்கப்பட்டன. பரிசுத்தவான்கள் நிலைத்திருந்து விசுவாசத்தில் வளர்ந்தார்கள். ஏனெனில் தூய ஆவியானவர் முதன்மை பெற்று அவரது கட்டளைகள் கீழ்ப்படியப்பட்டது.

இன்னும் எழுப்புதல் வர வேண்டும். மிகுந்த உடனடி கீழ்ப்படிதலும் அர்ப்பணிக்கிற மக்களும் வேண்டும். மனிதர் அவரது கட்டளைக்குக் காத்திருக்க வேண்டும். அவரது குரலுக்கே காத்திருக்க வேண்டும். வேறு எந்த குரலுக்கும் செவி சாய்க்கக் கூடாது. அப்படியெனில் நிச்சயமாக ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

ஆவியை அவித்துப் போடாதிருங்கள்

Quench not the spirit

George Soltau

"ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" (1தெச.5:19) என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்துகிறார். அதாவது தூய ஆவியானவரின் நோக்கம், பணி இவற்றை வெளிப்படுத்த இருக்கும் தடைகளை மாற்ற வேண்டும். ஆவியானவரின் அன்பும் வல்லமையும் சுத்த மகிமையின் ஜுவாலை போல ஒளி விட்டு பிரகாசிக்கட்டும். அது தேவாலயமாகிய சரீரத்தை ஊடுருவிச் சென்று, எல்லா ஆத்துமாக்களாகிய ஜன்னல்கள் வழியாகப் பிரகாசித்து அடுத்தவர்களின் இருதயங்களையும் கொழுந்துவிட்டு எரியச் செய்யட்டும்.

ஒரு நெருப்பை அணைக்க மூன்று வழிகள் உண்டு. 1. அப்படியே விட்டுவிடுவது, அதாவது நிர்விசாரம். 2. தண்ணீரை அதன்மேல் ஊற்றுவது (மனப்பூர்வமான பாவம்). 3. எரியாத பொருட்களை அதன் மீது போடுவது, அதாவது சுயநலமும் லௌகீகமும்.

இந்த முறைகளில் ஏதாவது ஒன்றின் மூலம் எளிதாக ஆவியானவர் அணைத்துப் போடப்படுகிறார். நிர்விசாரம் ஆத்துமாவில் நகர்ந்து வருகிறது. ஜெபமும் வேதவாசிப்பும் உதாசீனப்படுத்தப்படுகின்றன. தேவ அன்பு குளிர்ந்துபோகிறது. தூய ஆவியானவர் செயலிழந்து போகிறார்.

மனப்பூர்வமாக பாவம் செய்து, சாக்குப்போக்கு சொல்லி அதற்கு இடங் கொடுக்கும்போது, நாம் அதை சம்மதிக்காமல் உறுதியாக இருக்க வேண்டும்.

இன்னுமாக சுயம், உலகநேசம் இவை வாழ்வை அடிமைப்படுத்துமானால் ஆவியானவர் அணைக்கப்படுவார்.

எளிதாக அவர் துக்கப்படவும் எளிதாக சந்தோஷப்படவும் கூடும். அவர் பெரிய காரியங்களை கேட்கவில்லை. அர்ப்பணிக்கப்பட்ட சித்தம், கீழ்ப்படிதலுள்ள இருதயம் இவற்றால் அவர் மகிழ்ந்து ஆசீர்வதிக்கிறார்.

தமிழ்நாடு 2026

தேர்தலுக்காக ஜெபியுங்கள்

நாம் எல்லாப் பக்தியோடும் நல் லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- கிறிஸ்துவிடமிருந்து ஒரு விசுவாசி பெறக்கூடிய யாவும் கிருபையின் **ஆவியானவர்** மூலமாகவே வருகிறது.
- **ஜெபம்** என்பது '**ஆவியில் ஜெபிப்பது**' அதாவது தூய ஆவியானவரின் தூண்டுதல் மற்றும் வழி நடத்துதலின்படி ஜெபிப்பது.
- சபையின் தேவையும் உலகத்தின் தேவையும் தங்களில் வாசம் பண்ணும் **ஆவியான** கிறிஸ்துவை சாட்சிகரிப்பதும் அதை நிரூபிப்பதுமாகும்.
- ஜெபிப்பதற்காக நாம் தேவ சன்னிதானத்தில் வரும் போது நம்முடைய பெலவீனம், அறிவீனம் ஆகியவற்றை உணர்ந்து, நமது முற்றிலும் இயலாமையை உணர்ந்து தூய **ஆவியானவரை** நோக்கி நமது ஜெபங்களை திசைகாட்டி வழி நடத்தி நாம் உச்சரிக்க வேண்டிய வைகளை சரியாக ஏறெடுக்க அவரிடம் நம்மை ஒப்படைக்க வேண்டும்

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason